# செய்தி குறிப்பு

----------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (05.09.2024) கொளத்தூர், நேர்மை நகரில் தீயணைப்பு நிலையம், காவல் நிலையம் மற்றும் காவல் உதவி ஆணையர் அலுவலகம் அமைக்கப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற தொகுதியான கொளத்தூரில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளும், மக்கள் நலத்திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், உதவி ஆணையர் (குடிமைப் பொருள் வழங்கல்) ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, சென்னை கொளத்தூர், நேர்மை நகரில் தீயணைப்பு நிலையம், காவல் நிலையம் மற்றும் காவல் உதவி ஆணையர் அலுவலகம் ஆகியவற்றை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் திரு. பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குனர் திரு. பா. கணேசன்,இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் துறை கூடுதல் ஆணையர் (வடக்கு) திரு.கே. எஸ். நரேந்திரன் நாயர், இ.கா.ப., சென்னை மேற்கு காவல் துறை இணை ஆணையர் டாக்டர் பி.விஜயகுமார், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் திரு. கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், இ.ஆ.ப.,கொளத்தூர் காவல் துணை ஆணையர் திரு.ஆர்.பாண்டியராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி கீதா, மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் திரு.முருகன், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மாவட்ட அலுவலர் வடசென்னை திரு.ப.பி.லோகநாதன், மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஸ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.